RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s22215

# ஜெயமோகன் படைப்புகளில் சிறுதெய்வ வழிபாட்டு மரபுகள்

**பா. நாகஜோதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வே.வ. வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா

# Minor Deity Worship Traditions in Jayamohan's Works

**B. Nagajothi** [a, *]

[a] Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: nagajothib@vvvcollege.org

Received: 26.09.2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

From the time of Sangam literature to the present day, the authors have embodied in their works, all the cultural traditions that have interacted with the society in which they lived, which are in practice, and which have been stretched out as remnants. Because the Creator also lives in the same society. Through their works, they pass on the life experiences they have experienced and realized, as the pros and cons of life, to the readers. Thus, Jayamohan of Nanjil Nadu has recorded the Minor Deities and the worship of Nanjil Nadu in many places in his works. The purpose of this paper is to analyze them.

**Keywords:** Worship, Jayamohan, Mother Goddess, Poonkan, Irithikari

## முன்னுரை

நாட்டுப்புறத்தெய்வங்கள் எவ்வாறு தோன்றுகின்றன அல்லது வழிபாட்டுக்குரியவையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன? இவ்விவரங்களைப் பின்வருமாறு பகுத்துக் கூறலாம். 1. பிறப்பிலேயே தெய்வமாகப் பிறத்தல். 2. மூலக்கோயிலிருந்து பிடிமண் எடுத்து வந்து புதிய இடத்தில் உருவாக்கப்படும் பிடிமண் தெய்வங்கள். 3. பூமியிலிருந்து அல்லது பெட்டியிலிருந்து அல்லது பிற வழிகளில் கண்டெடுக்கப்படும் தெய்வங்கள். 4. மரணத்தில் தோன்றும் தெய்வங்கள் (Ramanathan, 2006).

தே.ஞானசேகரன் பதிப்பித்துள்ள ~ நாயக்கர் காலம் -நாட்டார் தெய்வக்கதைகளில் இடம் பெறும் கதைகளில் 82 தெய்வங்கள் அகால மரணத்தில் தோன்றியவை என்பதைத் தெரிவிக்கின்றன. (Ramanathan, 2006).

ஜெயமோகனின் படைப்புகளில் இடம் பெற்றுள்ள யட்சி எனப்படும் இயக்கி மரணத்தில் தோன்றும் தெய்வங்களாக உள்ளனர் என்பதை அவர் படைப்புகளின் வழி அறிந்து கொள்ள இயலுகிறது.

"அகால மரமடைந்தோர் ஆவி அவர்களுக்கு விதிக்கப்பட்ட நாள் வரை சுற்றிக் கொண்டே இருக்கும் என்னும் நம்பிக்கையும், அகால மரணத்திற்குக் காரணமானவர்களை அந்த ஆவி தண்டிக்கும் என்னும் அச்சமும் அந்த ஆவியை வழிபட்டால் தண்டனையிலிருந்து தப்பி நன்மை பெறலாம் என்னும் ஆசையும் நாட்டுப்புறத் தெய்வங்களின் தோற்றத்திற்கு அடித்தளமாகின்றன" (Ramanathan, 2006). இந்த நாட்டுப் புற அறிஞர்களின் கூற்றுப்படி ஜெயமோகன் படைப்புகளில் இடம் பெற்றுள்ள இயக்கிகள் மரணத்தில் தோன்றும் தெய்வங்களாக உள்ளனர். இந்த இயக்கி வழிபாடு தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் காணக் கிடைக்கின்றன.

## இயக்கி வழிபாடு

தமிழ்நாட்டில் பழந்தமிழர்களின் வழிபாட்டு மரபில் மறக்கப்பட்ட பண்பாடு தாய்த்தெய்வ வழிபாடாகும்.இதனைத் தொ. பரமசிவன் "தமிழ்நாட்டின் சமூக வரலாற்றினையும் பண்பாட்டு வரலாற்றினையும் கண்டுணருவதற்குத் துணை நிற்கும் சான்றுகளில் குறிப்பிடத் தகுந்தது தாய்த்தெய்வ வழிபாடாகும்" என்கிறார் (Paramasivam, 2022). சங்க இலக்கியங்களில் சூர் மகளிர், வரையறை மகளிர், கடல் கெழு செல்வி, கானமர் செல்வி, பாவை, அணங்கு போன்ற தெய்வங்களின் பெயர்கள் இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.அதன் பின் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இயக்கி தெய்வ வழிபாட்டை குறிப்பிடுவதைக் காண முடிகிறது.

## சிலப்பதிகாரத்தில் இயக்கி வழிபாடு

சிலப்பதிகாரத்தில் பாவை என்ற பெயரையுடைய மன்றம் பூம்புகாரில் இருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது.அதுபோல வனசாரிணி ,வரோத்தமை என்ற பெண் தெய்வம் பற்றிய குறிப்புகள் உள்ளன. இடைக்குலப் பெண்ணான மாதரி ~ பூங்கண் இயக்கி என்ற இயக்கியை மாலைக்காலத்தில் மதுரைக்கோட்டைக்கு வெளியே வந்து வழிபட்டாள். மேலும் மாதரி பாற்சோறு படைத்து இப்பூங்கண் இயக்கியை வழிபட்டாள் என்பதை அடைக்கலக்காதையில் வரும் வரிகள் உணாத்;தி நிற்கின்றன.

"அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய

புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்

புல்மடை கொடுத்துப் பண்பின் பெயர்வோள்" (சிலம்பு- மதுரை-அடைக்கலக்காதை-115-117)

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் இவ்வியக்கி வழிபாடே தமிழில் நமக்குக் கிடைத்துள்ள பழமையான சான்றாகும்.

## மணிமேகலையில் இயக்கி வழிபாடு

மணிமேகலை பௌத்த சமயக் கருத்தினை உள்ளீடாகக் கொண்ட காப்பியம்.இக்காப்பியத்தில் சம்பாபாதி அம்மன், மணிமேகலா தெய்வம் போன்ற சிறு தெய்வங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

"இளங்கதிர் ஞாயிறு என்றும் தோற்றத்து

விளங்கொளி மேனி விரிசடையாட்டி

பொன்திகழ் நெடுவரை உச்சித்தோன்றித்

தென்திசைப் பெயர்ந்த இத்தீவுத்தெய்வம்

சாகைச் சம்பு தன் கீழ் நின்று

மாநில மடந்தைக்கு வருந்துயர் கேட்டு

வெந்திறல் அரக்கர்க்கு வெம்பகை நோற்ற

சம்பு என்பாள் சம்பாபதி யினாள்" (மணி-பதிகம் -1-8 )

இவ்வாறு மணிமேகலைக் காப்பியத்தில் சிறுதெய்வங்கள் பலரின் பெயர் குறிப்பிட்டுள்ளதைக் காண முடிகிறது.

சங்க இலக்கியம் தொடங்கி சிலப்பதிகாரம், மணிமேகலையில் இடம் பெற்றுள்ள இயக்கி வழிபாட்டினின்று ஜெயமோகன் படைப்புகளில் இடம் பெற்றுள்ள இயக்கி வழிபாடு முற்றிலும் மாறுபட்டவையாக இருப்பதைக் காண முடிகிறது. ஜெயமோகன் படைப்புகளில் இடம் பெற்றுள்ள இயக்கி கதைகளில் சிலவற்றைக் காணலாம்.

## ஜெயமோகன் படைப்புகளில் இயக்கி

இயக்கி என்ற சொல் குறித்து இயக்கி வழிபாடு என்ற நூல் எழுதியுள்ள முனைவர் வேதாசலம் அவர்களுடைய கருத்துக்களை காணலாம். "இயக்கி என்ற சொல் சமண சமயத்தவரிடமிருந்து பெறப்பட்டது எனலாம். தீர்த்தங் கரருக்குப் பணிமகளாக விளங்கிய சமணப் பெண்தெய்வமே யட்சி என்றழைக்கப்பட்டாள். ஆண்தெய்வம் யட்சன் என்றழைக்கப்பட்டான். தமிழில் இச்சொற்கள் இயக்கி-இயக்கன் எனக் குறிப்பிடப்பெறும்" ஜெயமோகன் படைப்புகளில் இடம் பெறும் இயக்கி சங்கஇலக்கியங்களிலும் காப்பியங்களிலும் குறிப்பிடப் பெறும் இயக்கி அல்ல என்பதை அவருடைய படைப்புகளில் இடம் பெறும் கதைகள் வழி நிறுவ முடியும்.

## ஜெயமோகனின் படைப்புகளில் யட்சி கதைகள்

ஜெயமோகனின் காடு புதினத்தில் இயக்கி குறித்த அவருடைய வருணனை வருமாறு " அது ஒரு பெரிய மரக்கிளை .நான் ஒரு பெரிய மரத்தின் உச்சிக்கிளையில் தொங்கியிருந்தேன்.தலைக்கு மேல் வேறு ஒரு கிளையில் கரிய உடலும் நீண்டு பறக்கும் கூந்தலும் நுங்கு போன்ற முலைகளும் பச்சைக் கண்களும் கொண்ட இயக்கி"(ப-246-காடு- ஜெயமோகன் -2016)

செண்பக மரத்து யட்சி குறித்துப் பல இடங்களில் ஜெயமோகன் பதிவு செய்துள்ளார் "செம்பக மரத்து யட்சி அம்மாவின் குடும்ப வீட்டருகே நீலகண்ட சாமிக் கோயில் குளத்துக்கும் அவர்களுடைய தோட்டத்துக்கும் நடுவே நின்ற பெரிய செண்பக மரத்தின் அடியில் பிரதிஷ்டை செய்யப்பட்டவள். கல்பீடம் மீது கல்லால் செய்யப்பட்ட சிறுவிளக்கு..அதுதான் பிரதிஷ்டை" (ப-25-யட்சி- ஜெயமோகன்-2016). அவருடைய படைப்புகளில் பல இடங்களில் யட்சி குறித்த கதைகள் இடம் பெற்றுள்ளன.

1. சாலையோரத்து வாகை மரத்தடியில் ஒரு பெண் உட்கார்ந்திருப்பதைக் கண்டார் .குலஸ்த்ரீ என தோற்றம்.ஆனால் அச்சமில்லாமல் அக்காட்டுப்பாதையில் நிற்பவள் யட்சியன்றி வேறு யாரு ?" ப-61காமரூபிணி- ஜெயமோகன்- 2016)
2. "மேலேக்காவில் யட்சி இப்போது ஆண்டுக்கொருமுறை ஆடிமாதத்தில் சாந்தி பலியுடன் மறக்கப்படுபவள். கொள்ளை நோய் போல உயிர்குடித்து அலைந்த அவளை அடக்கியது வடக்கன் நம்பூதிரி ஒருவர். அவள் கிணற்றில் இறங்கியதும் மந்திர மஞ்சள் நூலை எடுத்து கிணற்றின் மேல் கட்டிஅவளை உள்ளே சிறையிட்டு விட்டார். ஆப்போதே கற்பாளங்களை தூக்கி வைத்து கிணற்றை மூடி மேலே பீடமெழுப்பி அவளைக் கருங்கல்லில் பிரதிஷ்டையாக்கினார்" (ப-73-கா.ரூ.ஜெயமோகன்-2016)
3. கையில் குழந்தையுடன் பஞ்சவன்காட்டு நீலி வண்டியில் செல்பவர்களிடம் "இம்பிடு சுண்ணாம்பு இருக்கா அண்ணா?" என்று கேட்டாள். வணிகனாக வந்த அவளை மணந்து வேற்றூர் கூட்டிச்சென்ற திருடன் அவளுடைய தலையில் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டான்.
4. கணவனுடன் வந்த தன்னைக் கொன்று சென்ற திருடர்களை வழி தவறி அவ்விடத்துக்கே வரச் செய்து கள்ளி மரம் போல ஒரு உடலில் பத்துக் கிளையுடல்களுடன் பேருரவம் காட்டி நின்ற கள்ளியங்காட்டடு யட்சி. (ப-78-காமரூபிணி-ஜெயமோகன்-2016)
5. "இடுப்பில் ஒரு குழந்தையும் வாயில் கடித்த குழந்தையுமாக வனநீலி செவ்வண்ணம் பூசப்பட்ட சுடுமண் சிற்பமாக நின்றாள். இடுப்பிலிருந்த குழந்தை யடசியின் மார்பைப் பருகிக் கொண்டிருந்தது.வாயிலிருந்த குழந்தையின் ரத்தம் கடைவாயில் வழிந்து தோள் சரிவில் சொட்டியது" (ப-219-காடு-ஜெயமோகன்-2016)
6. வீரமார்தாண்ட உதயரவிவர்மனின் மனைவிகள், ஆசைநாயகிகள், தாசிகள், அலிகள், எல்லோரும் அங்குதான் அடைபட்டு வாழ்ந்திருக்க வேண்டும். ஆவர்களில் ஒருத்தி தன் காதலுடன் கள்ள உறவு கொள்ளும்போது இன்னொரு ஆசைநாயகியால் காட்டிக் கொடுக்கப் பட்டாள். உதயரவிவர்மனின் வாளின் ஒரே வெட்டில் அவளும் அவள்மீது இருந்த காதலனும் தலைதுண்டிக்கப்பட்டார்கள். நிறைவேறாத காமத்தால் அவள் யட்சியானாள்.(ப-372-செண்பகயட்சி -ஜெயமோகன்-2011)

7. “சுனைக்காவு யட்சி வழிமறிப்பதில்லைஅதற்கான அதிகாரம் அவளுக் கில்லை. பின்னால் வந்து அழைப்பாள்.சபலப்பட்டுத் திரும்பிப் பார்ப்பவர் கள்தான் அவள் இரை. திரும்பிப்பார்க்காதவர்களை அவள் ஒன்றுமே செய்ய முடியாது”. (ப-531-கடைசி முகம்-ஜெயமோகன் -2011)
8. “அந்த வழியிலே காளபைரவிண்ணு ஒரு யட்சி உண்டு. பக்கத்திலே போனவன் ஒரு யோசனை தோணி அவ அப்பா அம்மாவைக் கும்பிடச் சட்டுன்னு கீழே ஆழ குனிந்திருக்கிறான்.அவ அப்பாவுக்கு ரெண்டு காலிலயும் குளம்பு இருந்திருக்கு.அம்மாவுக்கு ரெண்டு காலும் பன்னிக்காலாம் அப்பா எருமை மாடன் .அம்மா வராஹிணியம்மன்.(ப-89-ஏழுநிலைப்பந்தல் -ஜெயமோகன் -2011)
9. வடசேரி கனகமூலம் சந்தையின் புகழ் பெற்ற வேசியாக இருந்தாள் வள்ளியம்மை. ஏதோ பனங்காட்டிலிருந்து பிழைப்புக்காக வந்தவள். கரும்பனை போன்ற ஆறடி உயர தேகம். எண்பத்தி ஒன்றாம் வயதில் நல்ல நிறைந்த ஆடியமாவாசையில் பிரம்ம முகூர்த்தத்தில் சிரிந்து விழுந்து இறந்தாள். அங்கேயே காக்கும் பெருமாள் அவளுக்கொரு கோயில் கட்டினார். குழந்தைகளுக்கு வரும் நோய்களுக்கு வள்ளியம்மை இசக்கியின் பிரசாதம் கைகண்ட மருந்து என்று தேடி வருகிறார்கள்.” (ப-78-காமரூபிணி-ஜெயமோகன்-2011)

இவ்வாறு யட்சி குறித்த கதைகள் ஜெயமோகனின் கதைகளில் விரவிக் கிடக்கின்றன.இவருடைய கதைகளில் இடம் பெற்றுள்ள யட்சிகளில் பெரும்பாலோனோர் பிறரால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டு உயிர் விட்டவர்கள். அந்த அச்சத்தின் காரணமாகவே உயிர்ப்பலி கொடுக்கப்பட்டு வணங்கப்பட்டு வந்தவர்கள். பலர் நிறைவேறாத ஆசையுடன் அலைபவர்களாக உள்ளனர். ஆண்கள் மேல் அடங்காத வெறியுடன் அலைபவர்களாக உள்ளனர். வுள்ளியம்மை இசக்கி மட்டுமே மக்களுக்கு நன்மை தரும் தெய்வமாக உள்ளது. அவருடைய விபூதி பிரசாதம் குழந்தைகளுக்கு வரும் நோய்களைத் தீர்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## இயக்கி வழிபாட்டு முறைகள்

ஜெயமோகன் படைப்புகளில் இடம் பெற்றுள்ள இயக்கிகளின் வழிபாட்டு முறைகள் சிறிது வேறுபாடாக உள்ளதைக் காண முடிகிறது.

1. “பூசாரி பொங்கல் படைத்து கமுகம் பூவும் அரளிப்பூ மாலையும் சார்த்தி யட்சிக்குப் பூசை செய்தார்” (Jeyamohan, 2011)
2. “கொடை என்றால் கொடுக்கப்பட வேண்டியது. பண்டு கொடுக்கப் பட்டிருந்தது. குருதி மட்டுமே.ஆகவே பலி என்ற சொல்லே குருதி என்ற சொல்லாக இடமாற்றம் செய்யப்பட்டது. n ஆடு, கோழி, எருமை அபூர்வமாக பன்றி .இன்று மஞ்சள் பொங்கலும் மஞ்சணைக்குழம்பும் கொடுத்து குருதி கழிக்கிறார்கள்.ஆனால் ஒரு துளியேனும் ரத்தமில்லாமல் அடங்காத யட்சியர் உண்டு.கழுத்து வளைய கோழித்தலையை திருப்பி வளைவுமுனையை சிறு பேனாக்கத்தியால் சற்றே அறுத்து சொட்டும் வெங்குருதியை ஒவ்வொரு தேவிக்கும் ஒரு சொட்டு என விடுவார்கள்.” (Jeyamohan, 2011)
3. “களபச்செந்தூரப்பnhடி குழைத்துப் பூசி, உறை பிளந்து கமுகப்பூக் குலை பிரித்துச் சாற்றி அரளிமலர்மாலை சூட்டி, தெச்சி மலர் குவித்து, சீவிய செவ்விளநீரும் உருளியில் ஆவி தங்கும் அஞ்சள்; சோறும் அரிசிப்பெரியும் படைத்து, கொம்பூதி. ஒற்றைச்செண்டை கொட்டி“ (Jeyamohan, 2011)
4. “சட்டென்று அவர்கை பின்னுக்கிழுக்க முயல்கையில் இருவர் அவரை பிடிக்கிறார்கள். வெட்டியாகி விட்டதா ஆமாம். ரத்தம் சொட்டுகிறது. இரிட்டிக்காரியின் பீடத்தின் மேல் ஊமைக்கல்லில் அந்த நாளுக்கென களபத்தால் வரைந்த செக்கச் சிவந்த வாயில் சொட்டுகிறார்” (Jeyamohan, 2011)

இந்த வழிபாட்டு முறைகளில் இருவிதமான வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன. ஒன்று சாதாரணமாக பொங்கல் வைத்து வழிபடும் முறை .மற்றொன்று இரத்த பலி கொடுக்கும் முறை. சங்க

இலக்கிய காலம் தொட்டு சிலப்பதிகாரத்தில் மணிமேகலையில் வழிபடப்படும் இயக்கி பிறருக்கு நன்மை செய்பவளாகவும் பால்சோறு படைத்து வழிபடப்படும் தெய்வமாக இருந்தவள் ஜெயமோகன் படைப்புகளில் ரத்தம் குடிப்பவளாகவும் மனித உயிர்களைப் பலி வாங்கும் இயக்கியாக மாறியது எப்போது ? என்ற கேள்வி மனதில் எழுகிறது. நன்மை செய்யும் யட்சிகள் குறித்து ஜெயமோகன் தன் படைப்பில் கூறியுள்ளார்.

யட்சி குறித்து ஜெயமோகன் கூறுவதாவது "பொதுவாக தென்திருவிதாங்கூர் முழுக்க யட்சிகளும் நீலிகளும் அதிகம். தூயதமிழில் இயக்கி.நாஞ்சில் தமிழில் ஏக்கி.கருங்கண் இயக்கி என்று சிலப்பதிகாரம் சொல்லும். ஆயர்குல மூதாட்டி மாதரி அவளுக்கு பாலுடன் அன்னம் கொடையாகக் கொடுத்து வழிபட்டாள்.சங்ககாலத்தில் நெய்தீபம் ஏற்றி ஊன்பலி கொடுத்து வணங்கிய குடைவரை எழுதிய தொல்தமிழ்ப் பாவை இயக்கியாக இருக்கலாம். மதுரைக்குள் மாதரி வழிபட்ட இயக்கி இருந்தது கோட்டைக்கு வெளியே. கோட்டைக்குள் அரன் அமர்ந்தும் மால் நின்றும் அணி செய்து பூசனை கொண்டிருப்பார்கள். அவர்கள் பெருந்தெய்வங்கள். சொல்லால் வழிபட்டால் அருள்பவர்கள். உலகளந்தாயே, ஆயிரம் கண்ணனே என்றழைத்தால் குளிர்பவர்கள். யட்சிகள் நம் பாட்டியரைப் போல அத்தனை லௌகீகமானவர்கள். குளத்துக்குள் பாறை போல குளிர்ந்தவர்கள. (Jeyamohan, 2011)இவ்வாறு கூறிவிட்டு ஜெயமோகன் பெரும்பான்மையான கதைகளில் இரத்தப்பலி கேட்கும் இயக்கிகளையும் நீலிகளையும் இரிட்டிக்காரிகளையும் படைத்துள்ளார். ஜெயமோகன் வார்த்தைகளின் படி லௌகீகமாக குளிர்ந்த பாறை போல இருந்த சிறு தெய்வங்கள் பரம்பரை பரம்பரையாகப் பழி வாங்கும் தெய்வங்களாக மாறிய சூழலையும் தன் படைப்புகளில் பதிவு செய்துள்ளார். எங்கெல்லாம் பெண்கள் கொடுமைப் படுத்தபட்டுள்ளனரோ அங்கெல்லாம் ஒரு நீலி , இயக்கி, இரிட்டிக்காரி, பெண்தெய்வம் தோன்றுகிறது. இதையே ஜெயமோகன் தன் சிறுகதையில் பதிவு செய்துள்ளார் "ஆனால் யட்சியைக் கண்டுபிடிப்பது மிக மிக எளிது. காமம் கொண்ட ஆணின் கண்களில் இருந்து ஒளிந்து கொள்ள அவளால் முடியவே முடியாது" (Jeyamohan, 2011) எங்கெல்லாம் ஆண்களின் மனதில் காமவெறி கிளம்பி பெண்களை இரையாக்குகிறதோ அங்கெல்லாம் பெண்தெய்வங்கள் உருவாகுகின்றனர் எனலாம்.

## முடிவுரை

சிறுதெய்வ வழிபாடு தமிழிலக்கியங்களில் காலம் காலமாகச் சொல்லப்பட்டு வருவதைக் காண முடிகிறது. இன்றைய காலகட்டத்தில் சொல்லப்படுகின்ற சிறுதெய்வ வழிபாடு முற்றிலும் வேறுபாடானதாக இருப்பதைக் காண முடிகிறது. ஜெயமோகன் படைப்புகளில் உள்ள சிறுதெய்வங்களில் பெரும்பாலோனோர் பெண் தெய்வங்கள். காடன், மாடன் போன்ற ஆண் தெய்வங்களின் வழிபாடும் சிறுபான்மையாக இடம் பெற்றுள்ளன. பெண் தெய்வங்களில் பெரும்பாலான தெய்வங்கள் ஆண்களைப் பழி வாங்கத் துடிப்பவர்களாக இருப்பதைக் காண முடிகிறது.இயக்கி வழிபாட்டு முறைகளில் இரு வகையான வற்றைக் காண முடிகிறது. ஒன்று பொங்கல் வைத்துப் படைப்பது.மற்றொன்று குருதிப்பலி. பழி வாங்கத் துடிக்கும் எந்தவொரு இயக்கியும் பெண்களை எதுவும் செய்ததாகக் குறிப்பிடப்படவில்லை.

## References


Jeyamohan, B. (2011) Jeyamohan Kurunavalkal, Kizhakku Pathippagam, Chennai, India.

Paramasivam, T. (2022) Tamilar Uravu Muraikalum Samayamum Valipadu, New Century Book House, Chennai, India.

Ramanathan, (2006) Tamilar Valipattu Marabugal, Meyyappan Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License